(ஒன்பதாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. **99.]**

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2021 ஒக்டோபர் 07 வியாழக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன,** சபாநாயகர்

**கௌரவ ரன்ஜித் சியம்பலாபிடிய,** பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

---

**கௌரவ டலஸ் அழகப்பெரும,** வெகுசன ஊடக அமைச்சர்

**கௌரவ உதய கம்மன்பில,** வலுசக்தி அமைச்சர்

**கௌரவ தினேஷ் குணவர்தன,** கல்வி அமைச்சர் மற்றும் பாராளுமன்றச் சபை முதல்வர்

**கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,** வர்த்தக அமைச்சர்

**கௌரவ எஸ்.எம். சந்திரசேன,** காணி அமைச்சர்

**கௌரவ ஜனக பண்டார தென்னகோன்,** அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்

**கௌரவ நிமல் சிறிபால த சில்வா,** தொழில் அமைச்சர்

**கௌரவ டக்ளஸ் தேவானந்தா,** கடற்றொழில் அமைச்சர்

**கௌரவ வாசுதேவ நாணாயக்கார,** நீர்வழங்கல் அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண,** பெருந்தோட்ட அமைச்சர்

**கௌரவ ஜோன்ஸ்டன் பர்னாந்து,** நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசான்

**கௌரவ சீ.பீ. ரத்நாயக்க,** வனசீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சர்

**கௌரவ பெசில் ரோஹண ராஜபக்ஷ,** நிதி அமைச்சர்

**கௌரவ காமினி லொக்குகே,** மின்சக்தி அமைச்சர்

**கௌரவ (திருமதி) பவித்ராதேவி வன்னிஆரச்சி,** போக்குவரத்து அமைச்சர்

**கௌரவ எம். யூ. எம். அலி சப்ரி,** நீதி அமைச்சர்

**கௌரவ திலும் அமுனுகம,** வாகன ஒழுங்குறுத்துகை, பேரூந்துப் போக்குவரத்துச் சேவைகள் மற்றும் புகையிரதப் பெட்டிகள் மற்றும் மோட்டார் வாகன கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் மற்றும் சமூகப் பொலிஸ் சேவைகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லசந்த அலகியவன்ன,** கூட்டுறவுச் சேவைகள் சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சிறிபால கமலத்,** மகாவலி வலயங்களை அண்டியுள்ள கால்வாய்களின் அகழிகள் மற்றும் குடியிருப்புக்கள் பொது உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) நாலக கொடஹேவா,** நகர அபிவிருத்தி, கழிவுப்பொருட்களை அகற்றுதல் மற்றும் சமுதாய துப்புரவேற்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சிசிர ஜயகொடி,** சுதேச வைத்திய முறைகளின் மேம்பாடு, கிராமிய மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலைகள் அபிவிருத்தி மற்றும் சமூக சுகாதார இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அநுராத ஜயரத்ன,** கிராமிய வயல் நிலங்கள் மற்றும் அண்டியுள்ள குளங்கள், நீர்த்தேக்கங்கள் மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பியங்கர ஜயரத்ன,** வெளிநாட்டு தொழில்வாய்ப்பு மேம்பாடு மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ தயாசிறி ஜயசேக்கர,** பத்திக், கைத்தறி துணிகள் மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஜீவன் தொண்டமான்,** தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ விமலவீர திசாநாயக்க,** வனசீவராசிகள் பாதுகாப்பு, யானை வேலிகள் மற்றும் அகழிகளை அமைத்தல் உள்ளிட்ட பாதுகாப்பு வேலைத்திட்டங்கள் மற்றும் காடுகளை மீண்டும் வளர்த்தல் மற்றும் வனவளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சனத் நிசாந்த,** கிராமிய மற்றும் பிரதேச குடிநீர் வழங்கல் கருத்திட்டங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சுசில் பிரேமஜயந்த,** கல்விச் சீர்திருத்தங்கள், திறந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் தொலைக்கல்வி மேம்பாடு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ விஜித பேருகொட,** அறநெறிப் பாடசாலைகள், பிரிவெனாக்கள் மற்றும் பிக்குமார் கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பிரசன்ன ரணவீர,** பிரம்புகள், பித்தளை, மட்பாண்டங்கள், மரப்பொருட்கள் மற்றும் கிராமிய கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சஷீந்திர ராஜபக்ஷ,** சேதன பசளை உற்பத்தி மேம்பாடு மற்றும் விநியோக ஒழுங்குறுத்துகை மற்றும் நெல், தானிய வகைகள், சேதன உணவுகள், மரக்கறிகள், பழவகைகள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு செய்கை மேம்பாடு, விதை உற்பத்திகள் மற்றும் உயர் தொழில்நுட்ப கமத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ நிமல் லான்சா,** கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஜானக வக்கும்புர,** கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவா, கராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறு பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை அபிவிருத்தி மற்றும் அதுசார்ந்த கைத்தொழில்கள் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ விதுர விக்ரமநாயக,** தேசிய மரபுரிமைகள், அரங்குக் கலைகள் மற்றும் கிராமியக் கலைகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ கஞ்சன விஜேசேகர,** அலங்கார மீன்கள், நன்னீர் மீன்கள், இறால்களை வளர்த்தல், கடற்றொழில் துறைமுகங்கள் அபிவிருத்தி, பல நாள் கடற்றொழில் அலுவல்கள் மற்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ தேனுக விதானகமகே,** கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஜயந்த சமரவீர,** களஞ்சிய வசதிகள், கொள்கலன் முனையங்கள், துறைமுக வழங்கல் வசதிகள், இயந்திரப் படகுகள் மற்றும் கப்பற் தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ செஹான் சேமசிங்க,** சமுர்த்தி, வதிவிடப் பொருளாதார, நுண்நிதிய, சுயதொழில் மற்றும் தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ இந்திக அனுருத்த ஹேரத்,** கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை மற்றும் கட்டிடப் பொருட் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ கனக ஹேரத்,** கம்பனித் தோட்டங்களைச் சீர்திருத்துதல், தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்கள் சார்ந்த பயிர்ச்செய்கை, தேயிலைத் தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்துதல் மற்றும் தேயிலை மற்றும் இறப்பர் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ டீ. பி. ஹேரத்,** கால்நடை வளங்கள், பண்ணைகள் மேம்பாடு, பால் மற்றும் முட்டை சார்ந்த கைத்தொழில்கள் இராஜாங்க அமைச்சர்

---

**கௌரவ செல்வம் அடைக்கலநாதன்**

**கௌரவ அமரகீர்த்தி அதுகோரள**

**கௌரவ (திருமதி) தலதா அதுகோரல**

**கௌரவ சம்பத் அதுகோரல**

**கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க**

**கௌரவ ஹெக்டர் அப்புஹாமி**

**கௌரவ அஸோக அபேசிங்ஹ**

**கௌரவ (கலாநிதி) (திருமதி) ஹரினி அமரசூரிய**

**கௌரவ மாயாதுன்ன சிந்தக அமல்**

**கௌரவ தவராஜா கலை அரசன்**

**கௌரவ ஜே.சீ. அலவத்துவல**

**கௌரவ நஸீர் அஹமட்**

**கௌரவ திஸகுட்டி ஆரச்சி**

**கௌரவ யூ.கே. சுமித் உடுகும்புர**

**கௌரவ (மேஜர்) பிரதீப் உந்துகொட**

**கௌரவ சஞ்ஜீவ எதிரிமான்ன**

**கௌரவ அகில எல்லாவல**

**கௌரவ செல்வராசா கஜேந்திரன்**

**கௌரவ கோவிந்தன் கருணாகரம்**

**கௌரவ கயந்த கருணாதிலக்க**

**கௌரவ சாகர காரியவசம்**

**கௌரவ பைஸால் காசிம்**

**கௌரவ ஜயந்த கெட்டகொட**

**கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல**

கௌரவ உதயன கிரிந்திகொட

கௌரவ கெவிந்து குமாரதுங்க

கௌரவ கே.பி.எஸ். குமாரசிறி

கௌரவ அ. அரவிந்த் குமார்

கௌரவ வேலு குமார்

கௌரவ கருணாதாஸ கொடிதுவக்கு

கௌரவ மனோ கணேசன்

கௌரவ (திருமதி) டயனா கமகே

கௌரவ (டாக்டர்) உபுல் கலப்பத்தி

கௌரவ உதயகாந்த குணதிலக்க

கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன

கௌரவ யதாமிணீ குணவர்தன

கௌரவ சிவநேசதுரை சந்திரகாந்தன்

கௌரவ மிலான் ஜயதிலக்க

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன

கௌரவ குலசிங்கம் திலீபன்

கௌரவ பிரமித்த பண்டார தென்னகோன்

கௌரவ எம். எஸ். தௌபீக்

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா

கௌரவ சாமர சம்பத் தசனாயக

கௌரவ (திருமதி) மஞ்சுலா திசாநாயக

கௌரவ மயந்த திசாநாயக்க

கௌரவ சாரதீ துஷ்மந்த

கௌரவ (மேஜர்) சுதர்ஷன தெனிபிடிய

கௌரவ இசுரு தொடன்கொட

கௌரவ பிரேம்நாத் சி. தொலவத்த

கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன

கௌரவ எச். நந்தசேன

கௌரவ (டாக்டர்) கயாஷான் நவனந்த

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்

கௌரவ கிங்ஸ் நெல்சன்

கௌரவ சு. நோகராதலிங்கம்

கௌரவ புத்திக பத்திறண

கௌரவ அனுப பஸ்குவல்

கௌரவ நிமல் பியதிஸ்ஸ

**கௌரவ ஜகத் புஷ்பகுமார**

**கௌரவ டிலான் பெரேரா**

**கௌரவ நிரோஷன் பெரேரா**

**கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா**

**கௌரவ ஜீ.ஜீ. பொன்னம்பலம்**

**கௌரவ நலின் பிரனாந்து**

**கௌரவ அசோக்க பிரியந்த**

**கௌரவ (திருமதி) முதிதா பிரிஸான்தி**

**கௌரவ சஜித் பிரேமதாச,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ உத்திக பிரேமரத்ன**

**கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார**

**கௌரவ (பேராசிரியர்) ரஞ்சித் பண்டார**

**கௌரவ ரோஹண பண்டார**

**கௌரவ சாந்த பண்டார**

**கௌரவ றிஸாட் பதியுதீன்**

**கௌரவ சுதத் மஞ்சுல**

**கௌரவ எஸ்.எம். மரிக்கார்**

**கௌரவ கே. காதர் மஸ்தான்**

**கௌரவ இம்ரான் மஹ்ரூப்**

**கௌரவ இம்தியாஸ் பாகிர் மாகார்**

**கௌரவ அஜித் மான்னப்பெரும**

**கௌரவ எஸ். எம். எம். முஸ்ஸாரப்**

**கௌரவ மொஹமட் முஸம்மில்**

**கௌரவ அநுர பிரியதர்ஷன யாபா**

**கௌரவ வசந்த யாப்பாபண்டார**

**கௌரவ நிபுண ரணவக**

**கௌரவ பீ.வை.ஜீ. ரத்னசேக்கர**

**கௌரவ குமாரசிறி ரத்னாயக்க**

**கௌரவ அலி சப்ரி ரஹீம்**

**கௌரவ இஷாக் ரஹுமான்**

**கௌரவ முஜிபுர் ரஹுமான்**

**கௌரவ (கலாநிதி) சுரேன் ராகவன்**

**கௌரவ ஹர்ஷண ராஜகருணா**

**கௌரவ அஜித் ராஜபக்ஷ**

**கௌரவ குணதிலக ராஜபக்ஷ**

**கௌரவ (டாக்டர்) திலக் ராஜபக்ஷ**

**கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ**

**கௌரவ (கலாநிதி) விஜயதாச ராஜபக்ஷ**

**கௌரவ (கலாநிதி) வீ. இராதாகிருஷ்ணன்**

**கௌரவ எம். ராமேஷ்வரன்**

**கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்**

**கௌரவ காமினி வலேபொட**

**கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ**

**கௌரவ க.வி. விக்னேஸ்வரன்**

**கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன**

**கௌரவ சமிந்த விஜேசிறி**

**கௌரவ மதுர விதானகே**

**கௌரவ ஹேஷா விதானகே**

**கௌரவ (பேராசிரியர்) திஸ்ஸ விதாரண**

**கௌரவ (சனாதிபதி சட்டத்தரணி) ஜயந்த வீரசிங்க**

**கௌரவ டீ. வீரசிங்க**

**கௌரவ வீரசுமன வீரசிங்ஹ**

**கௌரவ திலிப் வெதஆரச்சி**

**கௌரவ குமார வெல்கம**

**கௌரவ சிவஞானம் சிறீதரன்**

**கௌரவ தருமலிங்கம் சித்தார்தன்**

**கௌரவ எம்.ஏ. சுமந்திரன்**

**கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி**

**கௌரவ வடிவேல் சுரேஷ்**

**கௌரவ ஜோன் செனவிரத்ன**

**கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன**

**கௌரவ ரஊப் ஹகீம்**

**கௌரவ அப்துல் ஹலீம்**

**கௌரவ கபீர் ஹஷீம்**

**கௌரவ எச்.எம்.எம். ஹரீஸ்**

**கௌரவ (பேராசிரியர்) சரித்த ஹேரத்**

**கௌரவ விஜித ஹேரத்**

**கௌரவ சமன்பிரிய ஹேரத்**

**கௌரவ மர்ஜான் பளீல்**

**கௌரவ பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா**

திரு. தம்மிக தசநாயக்க, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திருமதி குஷானி ரோஹனதீர, பணியாட்டொகுதிப் பிரதானியும் பிரதிப் பாராளுமன்றச் செயலாளர் நாயகமும்

திரு. டிக்கிரி கே. ஜயதிலக, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

**1. பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படல்:** (1) வனசீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சர், (469 ஆம் அத்தியாயமான) தாவர, விலங்கினப் பாதுகாப்புச் கட்டளைச் சட்டத்தின் 2(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் கீழ் வனசீவராசிகள் பாதுகாப்பு, மின்சாரவேலி மற்றும் அகழிகளை நிர்மாணித்தல் மற்றும் காடு மீள்வளர்ப்பு அத்துடன் காட்டு வள அபிவிருத்தி உள்ளிட்ட பாதுகாப்பு நடவடிக்கைகளைக் கடைப்பிடித்தல் இராஜாங்க அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2021 ஏப்ரல் 09 ஆம் திகதிய 2222/62 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையை சமர்ப்பித்து, அக்கட்டளையை வனசீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(2) நெடுஞ்சாலைகள் அமைச்சர், 2020 ஆம் ஆண்டுகளுக்கான ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் வருடாந்த செயற்திறன் அறிக்கையை சமர்ப்பித்தார்.

அவ்வறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(3) நெடுஞ்சாலைகள் அமைச்சர், 2018 ஆம் ஆண்டுக்கான சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத்தொகுதி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கையை இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**2. குழுக்களின் அறிக்கைகள் சமர்ப்பித்தல்**: (1) தற்போதுள்ள அமைச்சுகளின் கீழ் உள்வாங்கப்படாத அரச நிறுவனங்களால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்ற விடயங்கள் தொடர்பில் ஆராய்வதற்கான பாராளுமன்ற விசேட குழுவின் தவிசாளர் கௌரவ மஹிந்த ராஜபக்ஷ சார்பாக நெடுஞ்சாலைகள் அமைச்சர் தற்போதுள்ள அமைச்சுகளின் கீழ் உள்வாங்கப்படாத அரச நிறுவனங்களால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்ற விடயங்கள் தொடர்பில் ஆராய்வதற்கான பாராளுமன்ற விசேட குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட தேருநர்களைப் பதிவுசெய்தல் (திருத்தச்) சட்டமூலம் தொடர்பிலான அக் குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(2) அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் தவிசாளர், கௌரவ (பேராசிரியர்) திஸ்ஸ விதாரண ஒன்பதாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடருக்கான அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் மூன்றாவது அறிக்கையை சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனவும் **அச்சிடப்பட** வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

**3. பொது மனுக்கள் சமர்ப்பித்தல்:**

ருவன்வெல்ல, லெவன்கம, இல. எச்/18/1 இல் வதியும் திருமதி வை. சுசிலா பத்மினியினது 2021.06.29 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ சுதத் மஞ்சுல சமர்ப்பித்தார்.

மேற்படி மனு பாராளுமன்ற நிலையியற் கட்டளை 30(10) இன் கீழ் பொது மனுக்கள் பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

**4. ஒதுக்கீடு :** நிதி அமைச்சர் சமர்ப்பித்த சட்டமூலம்,— 2022 ஆம் நிதியாண்டின் சேவைக்கு ஏற்பாடு செய்வதற்கும்; அத்தகைய சேவையின் நோக்கத்திற்காக இலங்கையிலோ அல்லது இலங்கைக்கு வெளியிலோ கடன்களைத் திரட்டுவதற்கு அதிகாரமளிப்பதற்கும்; அந்நிதியாண்டின் போது அரசாங்கத்தின் குறித்த சில செயற்பாடுகள் தொடர்பில் நிதி ஏற்பாட்டைச் செய்வதற்கும்; அத்தகைய செயற்பாடுகளின் மீதான செலவினத்திற்கு அந்நிதியாண்டின் போது தேவைப்படும் பணங்களைத் திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத்திற்குரிய அல்லது அதன் கையாளுகையிலுள்ள வேறேதேனும் நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து முற்பணங்கள் என்ற வகையாக கொடுப்பனவை இயலச் செய்வதற்கும்; திரட்டு நிதியத்திற்கு அத்தகைய பணங்களை மீளளிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும், அத்துடன் அவற்றுடன் தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்.

சட்டமூலம் 2021 நவம்பர் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரண்டாவது முறையாக மதிப்பிடப்பட வேண்டுமெனவும் அச்சிடப்பட வேண்டுமெனவும் அரசாங்க நிதி பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்த வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

**5. இளந்தவறாளர்கள் (பயிற்சிப் பாடசாலைகள்) (திருத்தம்):** நீதி அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் சமர்ப்பித்த சட்டமூலம்,— (25 ஆம் அத்தியாயமான) இளந்தவறாளர்கள் (பயிற்சிப் பாடசாலைகள்) கட்டளைச் சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம் .

சட்டமூலம் 2021 ஒக்டோபர் 21 ஆம் திகதி வியாழக்கிழமை இரண்டாவது முறையாக மதிப்பிடப்பட வேண்டுமெனவும் அச்சிடப்பட வேண்டுமெனவும் நீதி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்த வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

**6. தண்டனைச் சட்டக்கோவை (திருத்தம்):** நீதி அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் சமர்ப்பித்த சட்டமூலம்,— (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையினைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

சட்டமூலம் 2021 ஒக்டோபர் 21 ஆம் திகதி வியாழக்கிழமை இரண்டாவது முறையாக மதிப்பிடப்பட வேண்டுமெனவும் அச்சிடப்பட வேண்டுமெனவும் நீதி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்த வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

**7. சட்டமூலம் கொண்டுவர அனுமதி ( இல.1 )** : கௌரவ நலீன் பண்டார ஜயமஹ வழிமொழிய கௌரவ வேலு குமார் சமர்ப்பித்த சட்டமூலம்,— “யூஎன்வீ மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்”

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதற்கமையச் சட்டமூலம் முதலாம் முறையாக மதிப்பிடப்பெற்று அச்சிடப்பட வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

பாராளுமன்ற நிலையியற் கட்டளை 52 (6) இன் கீழ் அறிக்கையிடுவதற்காக, சட்டமூலம் சுகாதார அமைச்சரின் கவனத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

**8. சட்டமூலம் கொண்டுவர அனுமதி ( இல.2 )** : கௌரவ நலின் பிரனாந்து வழிமொழிய கௌரவ இம்ரான் மஹ்ரூப் சமர்ப்பித்த சட்டமூலம்,— ‘‘அக்குறணை பைதுஸ் ஸகாத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்’’

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதற்கமையச் சட்டமூலம் முதலாம் முறையாக மதிப்பிடப்பெற்று அச்சிடப்பட வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

பாராளுமன்ற நிலையியற் கட்டளை 52 (6) இன் கீழ் அறிக்கையிடுவதற்காக, சட்டமூலம் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரின் கவனத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

**9. தேருநர்களைப் பதிவுசெய்தல் (திருத்தச்) சட்டமூலம்:** இரண்டாம் மதிப்பீட்டுக்கான கட்டளை வாசிக்கப்பட்டது.

“இச்சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் மதிப்பீடு செய்யப்படுமாக” என பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பிரேரித்தார்.

(மு.ப. 11.35 மணிக்கு பிரதி சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

“கௌரவ அஜித் ராஜபக்ஷ தலைமை தாங்குவாராக” என கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன பிரேரிக்க, கௌரவ வேலு குமார் ஆமோதித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 1.30 மணிக்கு கௌரவ அஜித் ராஜபக்ஷ தலைமை தாங்கினார்.)

(பி.ப. 4.19 மணிக்கு சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன் பிரகாரம் சட்டமூலம் இரண்டாம் மதிப்பீடு செய்யப்பட்டது.

“சட்டமூலம் முழுப்பாராளுமன்றக் குழுவின் பரிசீலனைக்கு விடப்படுமாக” நீதி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உடனே பாராளுமன்றம் குழுவாக மாறியது.

(குழுவில்)

சபாநாயகர் தலைமை தாங்கினார்.

1 ஆம் வாசகம்

1 ஆம் பக்கத்தில் 3 ஆம் 4 ஆம் வரிகளை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக நீதி அமைச்சர் திருத்தமொன்றைப் பிரேரித்தார்:—

“சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.

1. இச் சட்டம் 2021 ஆம் ஆண்டின் ……… ஆம் இலக்க, தேருநர்களைப் பதிவு செய்தல் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன் 2022, பெப்ரவரி 1 ஆம் திகதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.”

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு” மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

2 முதல் 4 வரையிலான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

5 ஆம் வாசகம்

2 ஆம் பக்கத்தில் 29 ஆம் 30 ஆம் வரிகளை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக நீதி அமைச்சர் திருத்தமொன்றைப் பிரேரித்தார்:—

"தகைமையுள்ள ஆளொவ்வொருவரும், 4 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி அத்தகைய ஆளின் தகைமைபெற்ற முகவரி எந்தத் தேர்தல் மாவட்டத்தில் அமைந்துள்ளதோ அந்தத்."

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

3 ஆம் பக்கத்தில் 1 முதல் 8 வரையிலான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக நீதி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:—

"(3) ஓராம் உட்பிரிவின்கீழ் தேருநரொருவராகப் பதிவுசெய்யப்படுவதற்குத் தகைமைபெற்ற ஆள் ஒவ்வொருவரும், பின்வரும் ஆவணங்களுடன் சேர்த்து, 4 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி அத்தகைய ஆளின் தகைமைபெற்ற முகவரி எந்தத் தேர்தல் மாவட்டத்தில் அமைந்துள்ளதோ அந்தத் தேர்தல் மாவட்டத்தின் பதிவு செய்யும் அலுவலருக்கு அத்தகைய விண்ணப்பத்தைச் செய்தல் வேண்டும்:-

(அ) அத்தகைய ஆளின் பிறப்புச் சான்றிதழின் பிரதியொன்றுடன்; அல்லது

(ஆ) அத்தகைய ஆளின் தேசிய அடையாள அட்டையின் பிரதியொன்றுடன்."

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

3 ஆம் பக்கத்தில் 9 முதல் 12 வரையிலான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிடுமாறு பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக நீதி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்.

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

5 ஆம் பக்கத்தில் 11 முதல் 16 வரையிலான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக நீதி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:—

"(8) உரிமைக் கோரிக்கைகளையும் ஆட்சேபனைகளையும் தீர்மானித்தல் தொடர்பாக இச்சட்டத்தின் எவையேனும் ஏற்பாடுகள், இப்பிரிவின்கீழான எவையேனும் உரிமைக் கோரிக்கைகளுக்கும் ஆட்சேபனைகளுக்கும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்."

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

5 ஆம் பக்கத்தில் 23 முதல் 25 வரையிலான வரிகளை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக நீதி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:—

"ப்படுத்துகையின்மீது குறைநிரப்பு நிரல்கள், சான்றுபடுத்தப்பட்ட குறைநிரப்பு இடாப்பென அறியப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தேர்தல் மாவட்டத்துக்கான தேருநர்களின் இடாப்பிற்கான இணைப்பொன்றாக இணைக்கப்படுதலும் வேண்டும்."

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

5 ஆம் பக்கத்தில் 25 ஆம் வரியை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவினை உட்புகுத்துமாறு பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக நீதி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:—

"(10) பிரிவு 20அ வின் (9) ஆம் உட்பிரிவின்கீழ் ஏதேனும் குறைநிரப்பு இடாப்பின் சான்றுபடுத்துகையின்மீது, பதிவுசெய்யும் அலுவலர், இடாப்பானது சான்றுபடுத்தப்பட்டுள்ளதென வர்த்தமானியிலும் மற்றும் தேசிய மொழிகளுள் ஒவ்வொன்றிலும் ஆகக்குறைந்தது ஒரு செய்தித்தாளிலேனும் அறிவித்தல் கொடுத்தல் வேண்டும்.

(11) ஏதேனும் தேர்தல் மாவட்டத்துக்கான சான்றுபடுத்தபட்ட குறைநிரப்பு இடாப்பானது (10) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்படும் தேதியன்று நடைமுறைக்குவருதல் வேண்டுமென்பதுடன் 15 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவிற்கு அல்லது 18 ஆம் பிரிவிற்கு இணங்க அதன்கண் அடுத்துப்பின்னர் செய்யப்படக்கூடியவாறான அத்தகைய மாற்றங்கள் எவையேனுமிருப்பின் அவற்றுக்கமைய, அத்தகைய சான்றுபடுத்தப்பட்ட குறைநிரப்பு இடாப்பு, அடுத்த சான்றுபடுத்தப்பட்ட இடாப்பு நடைமுறைக்குவருவதன்மூலம் தள்ளிவைக்கப்படும்வரை தொடர்ந்து நடைமுறையிலிருத்தலும் வேண்டும்."

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

5 ஆம் பக்கத்தில் 26 முதல் 33 வரையிலான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிடுமாறு பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக நீதி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்.

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு” மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

6 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

புதிய வாசகங்கள்

1 ஆம் பக்கத்தில் 26 ஆம் வரியை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துமாறு பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக சார்பாக நீதி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:—

“முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவைத் திருத்துதல்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "சனவரி முப்பத்தோராம் நாளன்று அல்லது அதற்கு முன்னர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "செத்தெம்பர் முப்பதாம் நாளன்று அல்லது அதற்குமுன்னர்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.”

“வாசகம் இரண்டாம் முறையாக மதிப்பீடு செய்யப்படுமாக” எனும் பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் சட்டமூலத்துடன் சேர்க்கப்பட வேண்டும்” எனும் பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

1 ஆம் பக்கத்தில் 33 ஆம் வரியை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துமாறு பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக சார்பாக நீதி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:—

“24அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன் இது அச்சட்டவாக்கத்தின் 24அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

பணிப்புக்களை வழங்குவதற்குத் தேர்தல் ஆணைக் குழுவுக்குள்ள தத்துவம்.

24அ. எவையேனும் சிரமங்கள் அல்லது எதிர்பாராத சூழ்நிலைகளுக்காக எற்பாடுசெய்வதற்கு அல்லது இச்சட்டத்தின்கீழ் தேருநர்களைப் பதிவு செய்தல் தொடர்பான ஏதேனும் கேள்வியை அல்லது கருமத்தைத் தீர்மானிப்பதற்காக அல்லது சீராக்குவதற்காக தேர்தல் ஆணைக்குழு அவசியமானவையென அது கருதக்கூடியவாறான அத்தகைய பணிப்புக்களை வழங்கலாம்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவைத் திருத்துதல்.

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவு, "தேருநர்களின் இடாப்பு" என்ற சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தில், "ஏதேனும் தேர்தல் மாவட்டத்துக்கான தேருநர்களின் இடாப்பு என்று பொருளாகும்;" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஏதேனும் தேர்தல் மாவட்டத்துக்காக 20அ என்னும் பிரிவின்கீழ் தயாரிக்கப்பட்ட சான்றுபடுத்தப்பட்ட குறைநிரப்பு இடாப்பு உட்பட, ஏதேனும் தேர்தல் மாவட்டத்துக்கான தேருநர்களின் இடாப்பு என்று பொருளாகும்;" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்துக்கான அட்டவணையைத் திருத்துதல்.

9. முதன்மைச் சட்டவாக்கத்துக்கான அட்டவணை இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அட்டவணையின் படிவம் அ வின் (2), (3) மற்றும் 5 (ii ) என்னும் விடயங்களில் "19 ..... யூன் 1 ஆந் தேதியன்று" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "20..... பெப்ரவரி 1 ஆந் தேதியன்று" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்.

(2) அட்டவணையின் படிவம் ஆ வின் (2), (3) மற்றும் 5 (ii ) என்னும் உட்பிரிவுகளில், "19..... யூன் 1 ஆந் தேதியன்று"என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "20..... பெப்ரவரி 1 ஆந் தேதியன்று" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்.

குறித்துரைக்கப் பட்ட காலப் பகுதியொன்றுக்கான குறைநிரப்பு நிரல்

10. (1) மூன்றாம் பிரிவின் ஏற்பாடுகள் எது எவ்வாறிருப்பினும், 2021, யூன் 1 ஆந் தேதியிலிருந்து இச்சட்டம் தொடங்கும் தேதி வரையிலான காலப்பகுதியில் ஏதேனும் தேதியில் பதினெட்டு வயதை எய்தியுள்ள எவரேனும் ஆள் தேருநரொருவராக தேருநர் இடாப்பில் அத்தகைய ஆளின் பெயரைப் பதிந்துகொள்வதற்கு அல்லது தொடர்ந்துவைத்திருப்பதற்கு தகைமையுடையவராதல் வேண்டும் அத்துடன் அத்தகைய ஒவ்வொரு ஆளும் எந்த தேர்தல் மாவட்டத்தில் 4 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி அத்தகைய ஆளின் தகைமையளிக்கும் முகவரி அமைந்துள்ளதோ அந்த தேர்தல் மாவட்டத்தின் பதிவுசெய்யும் அலுவலருக்கு 20அ என்னும் பிரிவின் (3) ஆம் உ;பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஆவணங்களுடன் சேர்த்து பதிவுக்கென விண்ணப்பித்தல் வேண்டும்.

(2) பதிவுசெய்யும் அலுவலர் ஒவ்வொருவரும் (1) ஆம் உட்பிரிவின் நோக்கத்திற்கென குறைநிரப்பு நிரலொன்றைத் தயாரித்தல் வேண்டுமென்பதுடன், குறைநிரப்பு நிரலின் தயாரிப்புக்கு 20அ என்னும் பிரிவின் (5) தொடக்கம் (11) ஆம் வரையிலான உட்பிரிவுகளில் குறித்துரைக்கப்படும் நடவடிக்கை முறைகள் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையவாதல் வேண்டும்."

''வாசகங்கள் இரண்டாம் முறையாக மதிப்பீடு செய்யப்படுமாக'' எனும் பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

''வாசகங்கள் சட்டமூலத்துடன் சேர்க்கப்பட வேண்டும்" எனும் பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும்:

"சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும் சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்ற" பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமூலம் திருத்தங்களுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

"சட்டமூலம் இப்பொழுது திருத்தங்களுடன் மூன்றாவது முறையாக மதிப்பிடப்படுமாக" என நீதி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதன்படி சட்டமூலம் திருத்தப்பட்டவாறு மூன்றாம் முறையாக மதிப்பிடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**10. ஊழியர் சகாய நிதியம் (திருத்தச்) சட்டமூலம் :** இரண்டாம் மதிப்பீட்டுக்கான கட்டளை வாசிக்கப்பட்டது.

“இச்சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் மதிப்பீடு செய்யப்படுமாக” என தொழில் அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன் பிரகாரம் சட்டமூலம் இரண்டாம் மதிப்பீடு செய்யப்பட்டது.

“சட்டமூலம் முழுப்பாராளுமன்றக் குழுவின் பரிசீலனைக்கு விடப்படுமாக என தொழில் அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உடனே பாராளுமன்றம் குழுவாக மாறியது.

(குழுவில்)

சபாநாயகர் தலைமை தாங்கினார்.

1 முதல் 3 வரையிலான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும்:

“சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும் சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்ற” பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமூலம் திருத்தங்களின்றி ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

“சட்டமூலம் இப்பொழுது மூன்றாவது முறையாக மதிப்பிடப்படுமாக”என தொழில் அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதன்படி சட்டமூலம் மூன்றாம் முறையாக மதிப்பிடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**11. ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் கீழ் கட்டளை:** தொழில் அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,— 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் 8 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 46 ஆம் பிரிவின் கீழ் தொழில் அமைச்சரால் ஆக்கப்பட்டதும், 2021.09.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**12. ஒத்திவைப்பு (கலைஞர்களின் பதிப்புரிமையைப் பாதுகாப்பதற்கான சுயாதீன நிறுவனம்) :** “இப்பாராளுமன்றம் இப்பொழுது ஒத்திவைக்கப்படுமாக” என நெடுஞ்சாலைகள் அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு எடுத்தியம்பப்பெற்று விவாதிக்கப்பட்டது.

“கௌரவ பிரேம்நாத் சீ. தொலவத்த தலைமை தாங்குவாராக” என வர்த்தக அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 5.05 மணிக்கு கௌரவ பிரேம்நாத் சீ. தொலவத்த தலைமை தாங்கினார்.)

அவ்வேளை, நேரம் பி.ப. 5.30 மணிக்கு மேலாகிவிடவே, இன்றைய தின சபைத் தீர்மானத்திற்கிணங்க பி.ப. 5.55 மணிக்கு தலைமை தாங்கும் உறுப்பினர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைத்தார்.

அதன்படி பாராளுமன்றம், 2021 ஒக்டோபர் 08 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 10.00 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.